
தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## 7 இடங்களில் 100 டிகிரி வெயில்



சென்னை,

தமிழகத்தின் 7 இடங்களில் வெள்ளிக்கிழமை 100 டிகிரிக்கும் அதிகமாக வெயில் பதிவானது. மாநிலத்திலேயே அதிகபட்சமாக திருப்பத்தூர் (வேலூர்), திருச்சி, பாளையங்கோட்டை, கரூர் பரமத்தி ஆகிய இடங்களில் 105 டிகிரி பதிவானது. வெள்ளிக்கிழமை பதிவான வெயில் (டிகிரி ஃபாரன்ஹீட்டில்):

திருப்பத்தூர் (வேலூர்), கரூர் பரமத்தி, பாளையங்கோட்டை, திருச்சி .................. 105

வேலூர் .................. 104

சேலம் .................... 103

தருமபுரி ................. 102

சென்னை................. 96

கொடைக்கானல் ...... 69

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 42.08 அடி**

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 42.08 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 352 கன அடி நீர் வந்தது. அணையில்

இருந்து ஆற்றில் 150 கன அடி நீரும், வாய்க்காலில் 1,500 கன அடி தண்ணீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 2.5 டி.எம்.சி.

**சத்தியமங்கலத்தில் இயற்கை வேளாண்மைக் கருத்தரங்கம்**

**சத்தியமங்கலம்,**

சத்தியமங்கலத்தில் நடைபெற்ற இயற்கை வேளாண்மைக் கருத்தரங்கில் திரளான விவசாயிகள் கலந்துகொண்டனர். சத்தியில் வெள்ளிக்கிழமை 22-ஆம் ஆண்டு இயற்கை வேளாண்மைக் கருத்தரங்கம் மற்றும் உலக தண்ணீர் தினவிழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்பாளர் பொ.காசியண்ணன் தலைமை வகித்தார். பவானி நதிநீர் பாசன பாதுகாப்பு சங்கத் தலைவர் அ.ராமசாமி முன்னிலை வகித்தார். நீரை சேமிக்க எளிய வழிகள் என்ற தொகுப்பை பவானிசாகர் அணைக் கோட்டப் செயற்பொறியாளர் எஸ்.நடராஜன் வெளியிட்டு பேசினார்.

தமிழக உழவர் தொழில்நுட்பக் கழகத் தலைவர் எஸ்.ஆர்.சுந்தரராமன், நீர் பகிர்மானக் கமிட்டித் தலைவர் தி.நடராசு, அரக்கன்கோட்டை பாசன சபை தலைவர் சிரில் சார்லஸ், உழவர் விவாதக்குழு அமைப்பாளர் கேஎஸ்ஏ செம்பணன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**பகலில் வெப்பம் மீண்டும் உயர வாய்ப்பு**

**நாமக்கல்,**

பகலில் வெப்பம் மீண்டும் உயர்வதற்கான வாய்ப்பு உள்ளதாக நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 4 நாள்களில் (ஏப்.19 முதல் 22-ஆம் தேதி வரை) சனிக்கிழமை மட்டும் வானம் லேசான மேகமூட்டத்துடனும், மற்ற நாள்களில் தெளிவாகவும், மழையின்றியும் காணப்படும். காற்றின் திசைவேகம் மணிக்கு 5 கிமீ முதல் 7 கிமீ வேகத்தில் தெற்கு, தென்கிழக்கிலிருந்து வீசக்கூடும்.

வெப்பநிலை குறைந்தபட்சம் 77 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 102.2 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 22 சதம் முதல் அதிகபட்சம் 68 சதம் வரை இருக்கும்.

கோழிப் பண்ணையாளர்களுக்கு

தற்போதைய வானிலை அடிப்படையில் வரும் நாள்களில் மேகமூட்டமும், இதைத்தொடர்ந்து, மழைக்கான வாய்ப்பும் குறைவாக இருப்பதால், பகல் வெப்பம் மீண்டும் உயர வாய்ப்புள்ளது. எனவே, கோழிப் பண்ணைகளில் தீவிர கோடை மேலாண்மை முறைகளை தொடர்ந்து கடைப்பிடித்திட வேண்டும்.

கோழியின நோய் ஆய்வகத்தில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், கோழிகள் பெரும்பாலும் மேல்மூச்சுக்குழல் நோய், நாள்பட்ட சுவாச நோய்களால் இறந்திருப்பது தெரிய வந்தது. எனவே, பண்ணையாளர்கள் கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படி கொட்டகையில் நோய்க்கிருமிகளின் அளவைக் கட்டுப்படுத்த உரிய கிருமிநாசினி மருந்துகளைத் தௌ0க்க வேண்டும். கோடை வெயிலின் தாக்கம் அதிகமுள்ள நாள்களில் நீர்த் தெளிப்பானை அடிக்கடி உபயோகப்படுத்திட வேண்டும்.

வேளாண் விவசாயிகளுக்கு

வெப்பநிலை உயர்வு காரணமாக மரவள்ளியில் சுருள் வெள்ளை ஈ தாக்குதல் அதிகளவில் காணப்படுகிறது. இந்தப் பூச்சியின் தாக்குதலால் இலைகளில் பிசுபிசுப்புத் தன்மை காணப்படும். இது கரும்படல நோய் பரவ வழிவகுக்கும். இதனால், ஒளிச்சேர்க்கை பாதிக்கப்பட்டு, செடியின் வளர்ச்சி குறைந்து மகசூல் இழப்பு ஏற்படும்.

இதைக் கட்டுப்படுத்த இரவு நேரங்களில் விளக்குப்பொறி அமைப்பதன் மூலம் தாய் அந்துப்பூச்சியைக் கவர்ந்து அழிக்கலாம். தவிர, டிரை அசோஃபாஸ் என்ற

பூச்சிக்கொல்லி மருந்தை ஒரு மிலி ஒட்டும் திரவம் ஒரு மிலி என்ற அளவில் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து 10 நாள்கள் இடைவெளியில் மூன்று முறை தெளிக்க வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தமிழகத்தில் வெப்பத்தின் தாக்கம் அதிகரிப்பு

**சென்னை:** தமிழகத்தில் கடந்த சில தினங்களாக குறைந்திருந்த வெப்பத்தின் தாக்கம், மீண்டும் அதிகரிக்கத் துவங்கியுள்ளது. தமிழகத்தில், கோடை வெயிலின் தாக்கம், ஜனவரி முதலே துவங்கி விட்டது. மார்ச் இறுதியில் இருந்தே, குறிப்பிட்ட சில பகுதிகளில், 100 டிகிரி பாரன்ஹீட்டை தாண்டி, வெப்பம் பதிவாகி வருகிறது. இரவு நேரத்திலும் அனல் தாக்கியது. இதனால், பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகினர். இதற்கிடையே, வெப்பச் சலனம், வங்கக்கடல் பகுதியில் உருவான காற்று மேலடுக்கு சுழற்சி காரணமாக, தமிழகத்தின் தெற்கு மற்றும் மேற்கு பகுதிகளில், கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக, ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. மதுரை, திருச்சி, வேலூர், சேலம், திருத்தணி, திருப்பத்தூர் போன்ற இடங்களில், வெயிலின் தாக்கம் அதிகரித்திருந்தது. மதுரை, திருச்சி மற்றும் வேலூரில், நேற்று காலை நிலவரப்படி, இயல்பளவை விட, 2 டிகிரி செல்சியஸ் வெப்பம் உயர்ந்து, 40 டிகிரி செல்சியஸ் (104 டிகிரி பாரன்ஹீட்) பதிவாகியுள்ளது. தமிழகம் மற்றும் புதுச்சேரியில் கோடை மழை, இன்னும் இரண்டு தினங்களுக்கு நீடிக்க வாய்ப்புள்ளதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## பரம்பிக்குளம் அணையின் நீர்மட்டம்

பரம்பிக்குளம் அணையின் நேற்றைய நீர்மட்டம், 16.99 அடி. நீர்பிடிப்புப்பகுதிகளில் இருந்து அணைக்கு, 223, கன அடி தண்ணீர் வந்தது. வினாடிக்கு, 435 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டது. அணைப்பகுதியில் 21 மி.மீ., மழை பெய்தது.

## காலதாமதமாக துவங்கிய மாம்பழ சீஸன்:குறைவான வரத்தால் விலை உயர்வு

**தர்மபுரி**: தர்மபுரியில், பருவமழை ஏமாற்றம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், மாம்பழ சீஸன் காலதாமதமாக துவங்கி உள்ளது.தமிழக அளவில், மா அதிகம் சாகுபடி செய்யப்பட்டுள்ள மாவட்டங்களில், தர்மபுரி மாவட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. மாவட்டத்தில், தர்மபுரி, நல்லம்பள்ளி, பென்னாகரம், பாலக்கோடு, காரிமங்கலம், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி உட்பட மாவட்டம் முழுவதும், சாதாரண முறையில், 16,183 ஹெக்டேர், அடர் நடவு முறையில், 524 ஹெக்டர் என, மொத்தம், 16,707 ஹெக்டேர் மா சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

கடந்தாண்டு, தர்மபுரி மாவட்டத்தில், தென்மேற்கு பருவமழை விவசாயிகளை ஏமாற்றினாலும், வட கிழக்கு பருவமழை ஓரளவுக்கு பெய்தது. இதனால், மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர்மட்டம், ஓரளவுக்கு உயர்ந்ததுடன், நிலத்தடி நீர்மட்டமும் உயர்ந்தது. பருவமழையை தொடர்ந்து, மாவட்டம் முழுவதும் குளுமையான சீதோஷன நிலை, பிப்ரவரி மாதம் மத்திய பகுதி வரை தொடர்ந்தது.

இதனால், மாவட்டம் முழுவதும் சாகுபடி செய்யப்பட்டுள்ள பெரும்பாலான, மா மரங்களில் அதிகளவில் பூக்கள் பூத்து குலுங்கியதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். ஆனால், பிப்ரவரி இறுதி முதல் மாவட்டத்தில், பகல் நேரங்களில், வெயில் கொளுத்தி வந்தது.

இதனால், மா மரங்களில் இருந்து பூக்கள் கருகி உதிர்ந்தன. மாவட்டத்தில், மார்ச், ஏப்ரல் மாதங்களிலும், வெயில் கொளுத்தி வந்ததால், மா மரங்களில் உள்ள பிஞ்சு மற்றும் காய்கள் அதிகளவில் உதிர்ந்தது. மேலும், மாவட்டத்தில் போதிய அளவு கோடை மழை பெய்யாததால், மாங்காய்கள் சிறுத்து காணப்பட்டதுடன், மாம்பழம் சீஸனும் கால தாமதம் ஏற்பட்டது. பருவமழை ஏமாற்றம் மற்றும் கோடை வெயில் பாதிப்பு காரணமாக தர்மபுரி மாவட்டத்தில் வழக்கமாக, மார்ச் ஆரம்பத்தில்

துவங்கும் மாம்பழ சீஸன், இந்தாண்டு, கடந்த சில தினங்களுக்கு முன் தான் துவங்கி உள்ளது.

தற்போது, செந்தூர ரக மாம்பழம் மட்டுமே விற்பனைக்கு வந்துள்ளது. மாம்பழ சீஸன் காலதாமதாக ஏற்பட்டுள்ளதுடன், வரத்தும் குறைவாகவே உள்ளது. இதனால், ஒரு கிலோ செந்தூர மாம்பழம், 45 ரூபாய் முதல், 50 ரூபாய் வரை, சாலை ஓரங்கள் மற்றும் மாம்பழ கடைகள் மற்றும் மண்டிகளில் விற்பனை செய்யப்படுகிறது.

மேலும், பிரதான ரகங்களான மல்கோவா, பீத்தர், ரூமோனியா உள்ளிட்ட ரகங்கள் அடுத்த மாதம் தான் விற்பனைக்கு வரும் என வியாபாரிகள் தெரிவித்தனர். மாம்பழ சீஸன் காலதாமதமாக துவங்கி உள்ளதாலும், போதிய விளைச்சல் இல்லாததாலும், இந்தாண்டு, தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள மாம்பழ கூழ் தயாரிக்கும் பெரும்பாலான ஆலைகள் இயங்காமல் உள்ளது. மா வரத்து குறைவால், மாங்காய் மற்றும் மாம்பழ விலை உயர்வால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## ஒரே வாரத்தில் வெங்காய விலை 40% உயர்வு



**நாசிக்** : போதிய மழை இல்லாததால், வெங்காய உற்பத்தி குறைந்து விட்டதால் மொத்த விலை சந்தையில் கடந்த ஒரே வாரத்தில் வெங்காயத்தின் விலை 40 சதவீதம் அதிகரித்துள்ளதாக லாசல்கான் வேளாண் உற்பத்தி சந்தைக் குழு தெரிவித்துள்ளது. ஏப்ரல் 10ம் தேதி ரூ.575 முதல் ரூ.801 வரை இருந்த ஒரு குவிண்டால் வெங்காயத்தின் விலை, ஏப்ரல் 17 அன்று ரூ.750 முதல் ரூ.1011 வரை என்ற அளவிற்கு அதிகரித்துள்ளது. சில்லரை விற்பனை சந்தையில் ஒரு கிலோ

தரமான வெங்காயத்தின் விலை ரூ.12 முதல் ரூ.15 வரை விற்பனையாகிறது. காலம் தவறிய மழை காரணமாக வெங்காயங்கள் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளதும் இந்த விலை ஏற்றத்திற்கு காரணம் எனவும் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். வெங்காயத்தின் விலை திடீரென கடுமையாக உயர்வதும், பின் சரிவதும் வெங்காய விவசாயிகளிடையே கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

## கொடைக்கானலில் கோடை விழா: மே 24 ல் மலர்க்கண்காட்சி



**கொடைக்கானல்**: கொடைக்கானலில் மே 24 ல் மலர்க்கண்காட்சி துவங்க உள்ள தால், பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது. கொடைக்கானல் வரும் சுற்றுலாப்பயணிகளுக்கு ஏரியில் படகு சவாரிக்கு அடுத்தபடியாக மனதைக் கவர்வது பிரையண்ட் பூங்கா. தற்போது பேன்சி, அஸ்டமேரியா உள்ளிட்ட பல்வேறு வகையான மலர்கள் பூங்காவில் பூத்துக் குலுங்குகின்றன. டேலியா மலர்கள் தற்போது தான் பூக்க துவங்கியுள்ளன. இன்னும் பல வகை மலர்கள், பூக்கும் தருவாயில் உள்ளன. பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டதால் கொடைக்கானலுக்கு சுற்றுலா பயணிகள் வருகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. நேற்று, பிரையண்ட் பூங்காவில், சுற்றுலா பயணிகளின் கூட்டம் அதிகளவில் காணப்பட்டது. கோடை விழா மே மாதத்தில் துவங்க உள்ளதால் இதற்கான ஏற்பாடுகளை பூங்கா பராமரிப்பாளர்கள் பணிகளை மும்முரமாக செய்துவருகின்றனர்.

இதுகுறித்து பிரைண்ட் பூங்கா மேலாளர் எபன் ராஜா கூறுகையில், "அனைத்து வகை பூக்களும். மே 1க்குள் மலர்ந்துவிடும். கோடைவிழா தொடர்பான ஆலோசனைக் கூட்டம், தேர்தல் முடிந்த பின் நடைபெறவுள்ளது. திண்டுக்கல்லில் கலெக்டர் தலைமையில் நடக்க உள்ள கூட்டத்தில் அனைத்து துறை அதிகாரிகள்

பங்கேற்கின்றனர். மே 24 ல் மலர்க்கண்காட்சியுடன் கோடை விழா துவங்கி, மே 31ல் நிறைவடைய உள்ளது, என்றார்.

## மதுரையில் அதிக வெப்பம்

**சென்னை** : தெற்கு மற்றும் மேற்கு தமிழகத்தில், ஆங்காங்கே சில பகுதிகளில், தற்போது, கோடை மழை பதிவாகி வருகிறது. நேற்று காலை நிலவரப்படி, நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டில், 2 செ.மீ., மழை பதிவாகியது. இது தவிர, கேரளா, கர்நாடகத்தின் சில பகுதிகளிலும் மழை பெய்துள்ளது. 'இந்த மழை, இன்னும், 2 தினங்களுக்கு நீடிக்கும்' என, சென்னை வானிலை ஆய்வுமையம் அறிவித்துள்ளது. வெப்பத்தை பொறுத்தவரை, மதுரை, திருச்சி, திருத்தணி, வேலுாரில் அதிகபட்சமாக, 39 டிகிரி செல்சியஸ்(102.2 டிகிரி பாரன்ஹீட்) வெப்பம் பதிவாகியுள்ளது. வெப்பநிலையை பொறுத்தவரை, அனைத்து பகுதிகளிலும் இயல்பளவை ஒட்டியே உள்ளது.

## கொள்ளிடத்தில் தடுப்பணை: பொதுப்பணித் துறையினர் ஆய்வு

**காட்டுமன்னார்கோவில்**: கொள்ளிடம் ஆற்றில் கடல் நீர் உட்புகுவதைத் தடுக்க தடுப்பணை கட்டுவது குறித்து பொதுப்பணி துறையினர் ஆய்வு மேற்கொண்டனர். கொள்ளிடம் ஆற்றில் கடல் நீர் உட்புகுவதால் கரையோர கிராமங்களான வல்லம்படுகை, வல்லத்துரை, நலன்புத்தூர், கருப்பூர், மேல பருத்திக்குடி, கீழ பருத்திக்குடி, முள்ளங்குடி உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட கிராமங்களில் குடிநீர் பாதிக்கப்பட்டுள்ளது. கடலில் இருந்து ஆற்றில் தண்ணீர் ஏறுவதைத் தடுக்கும் வகையில் தடுப்பணை கட்ட வேண்டும் என கீழணை பாசன விவசாய சங்கம் கோரிக்கை விடுத்து வந்தது.

அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் தஞ்சை மாவட்ட திட்டம் மற்றும் வடிவமைப்பு செயற் பொறியாளர் சண்முகவடிவேல் தலைமையில் ஒரு குழுவினர் கொள்ளிடம் ஆற்றில் ஆய்வு மேற்கொண்டனர். விவசாய சங்கத் தலைவர் வினாயகமூர்த்தி, ஊராட்சித் தலைவர் கலியமூர்த்தி மற்றும் பொதுப்பணித் துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.

## கிர்ணி பழம் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

**கச்சிராயபாளையம்**: நல்லாத்தூர் கிராமத்தில் கோடை கால கனியான கிர்ணி பழம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கச்சிராயபாளையம் பகுதியில் அதிக அளவில் விவசாயம் செய்யப்படுகிறது. கோடைகாலத்திற்கு ஏற்ற பழங்களான வெள்ளரி, தற்பூசனி போன்ற பயிர்களை பயிர் செய்தனர். தற்போது நல்லாத்தூர் உட்பட பல பகுதிகளில் கிர்ணி பழம் சாகுபடி செய்வதிலும் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். கிர்ணி சாகுபடி செய்ய ஏக்கருக்கு 200 கிராம் விதையே போதுமானது. ஒரு கிலோ கிர்ணி பழ விதைகள் ரூ 13,500 ஆகும். 11 நாளான நாற்றுகளை 4 அடி அகலத்தில், 2 அடி இடைவெளியில் நடவு செய்யப் படுகிறது. நடவு செய்த 14ம் நாள் டி.ஏ.பி., யூரியா, பொட்டாஷ் ஆகியவை கலந்து உரமிட வேண்டும். 5 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் கட்டும் போது சிறிதளவு உரமிட்டால் செடிகள் நன்கு வளரும். சாதாரண முறையிலும், சொட்டு நீர் பாசன முறையிலும் தண்ணீர் செலுத்தலாம். செடிகள் பூக்கும் சமயத்தில் பூச்சிகளின் தாக்குதல்களை கட்டுப்படுத்த பூச்சி மருந்துகளை தெளிக்க வேண்டும். 30 நாட்களில் காய்க்க துவங்கி 45 நாட்களில் பழங்கள் அறுவடைக்கு தயாராகின்றன. தற்போது ஒரு கிலோ பழம் சில்லரை விற்பனையில் 20 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஒரு டன் கிர்ணி பழம் 13,000 ரூபாய் ஆகும். ஒரு ஏக்கரில் 15 டன் கிர்ணி பழங்கள் கிடைக்கும், இதன் மூலம் 1 லட்சம் முதல் 1.5 லட்சம் வரை லாபம் கிடைக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

## மல்லிகை பூ விலை சரிவு; வாட்டத்தில் விவசாயிகள்

**சத்தியமங்கலம்**: சத்தியமங்கலத்தில் உள்ள, பூ மார்கெட்டில் மல்லிகை பூ விலையில் சரிவு ஏற்பட்டதால், விவசாயிகள் வருத்தமடைந்துள்ளனர். சத்தியமங்கலம் பகுதியில், 50,000 ஏக்கருக்கு மேல், விவசாயிகள் மல்லிகை பூ பயிரிட்டுள்ளனர். இப்பகுதியில் இருந்து, தினமும், 15 டன்னுக்கு மேல் மல்லிகை பூ, உற்பத்தி செய்யப்படுகிறது. இம்மல்லிகைப்பூ, சத்தியமங்கலம் பஸ் ஸ்டாண்ட் அருகே உள்ள, விவசாயிகள் பூ மார்க்கெட்டில் ஏலம் முறையில், விற்பனை செய்யப்படுகிறது. பின், இங்கிருந்து தமிழகம் முழுவதும் இந்த மல்லிகைப்பூ, விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது. அதேபோல், கர்நாடக மாநிலத்தை சேர்ந்த பெங்களூரு மற்றும் மைசூர் பகுதிகளில், சத்தியமங்கலம் மல்லிகைக்கு தனி

மவுசு உள்ளது. இதற்கு காரணம், இங்கு விளையும் மல்லிகை பூவின் காம்பு பெரியதாக இருப்பதாகும். இதேபோல், கோவையில் இருந்தும் விமானம் மூலம், சத்தியமங்கலம் மல்லிகை பூ, மும்பை செல்வதும் குறிப்பிடத்தக்கதாகும். புகழ்பெற்ற, சத்தியமங்கலம் மல்லிகைப்பூ, சீஸன் நேரத்தில் ஒரு கிலோ, 1,500 ரூபாய் வரை விற்பனையாகி, சாதனை படைத்துள்ளது. ஆனால், தற்போது, மல்லிகை பூ விலை கடுமையாக சரிந்துள்ளது. ஒரு கிலோ மல்லிகை, 80 முதல், 100 ரூபாய் வரை விற்பனையாகிறது. ஒரு கிலோ மல்லிகை பறிப்பதற்கே, 50 ரூபாய் கூலி வழங்க வேண்டிய நிலையில், விலையும் குறைவாக உள்ளதால், மல்லிகை விவசாயிகள் வருத்தம் அடைந்துள்ளனர். இது குறித்து மல்லிகை பூ விவசாயி, சிக்கரசம்பாளையம் வடிவேலு கூறியதாவது: கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக, நான் மல்லிகைப்பூ பயிரிட்டுள்ளேன். தற்போது, இதன் விலை மிகவும் குறைவாக உள்ளது. இதற்கு முக்கிய காரணம், உற்பத்தி அதிகம் மற்றும் சித்திரை மாதம் என்பதாகும். இந்த விலைக்கு தொடர்ந்து விற்றால், மல்லிகைப்பூ விவசாயிகள், மிகவும் பாதிக்கப்படுவர், என்றார்.

## ஊட்டியில் இடியுடன் கூடிய மழை

**ஊட்டி** : ஊட்டியில், நேற்று இடியுடன் கூடிய மழை பெய்தது. "குளு, குளு' காலநிலையை, சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.நீலகிரி மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக பரவலாக கோடை மழை பெய்து வருகிறது. நேற்று மதியம், ஊட்டியில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. இதனால், சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. ஊட்டி, கூடலூர், முதுமலை பகுதிகளில் பெய்த மழையால், வறண்டிருந்த நிலங்கள், வனங்கள் பசுமைக்கு திரும்ப துவங்கியுள்ளன.மழையால், ஊட்டி பார்சன்ஸ்வேலி அணை உட்பட பிற இடங்களில் உள்ள நீராதாரங்கள் மெல்ல உயரும் என, எதிர்பார்க்கப்படுகிறது. கொளுத்தும் வெயிலில் இருந்து தப்பித்து, தொடர் விடுமுறையை, "குளு, குளு' ஊட்டியில் கழிக்க வந்துள்ள சுற்றுலா பயணிகள், மழையை ரசிக்கின்றனர். மழையால், காலநிலையில் மாற்றம் ஏற்பட்டு, குறைந்தபட்சம் 7.2 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை மட்டுமே நிலவுவதால், சுற்றுலா பயணிகள் வெம்மையாடைகளை அணிந்து, ஊட்டி சாலைகளில் "ஹாயாக' உலா வருகின்றனர். இதனை தொடர்ந்து வரும் நாட்களில் கூட்டம் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

**உணவு பொருள் தொழிற்சாலைகள் ஊக்குவிக்க வேளாண் துறை முடிவு**

**திண்டுக்கல்** : விளை பொருளை, உணவு பொருளாக்குவதற்கான தொழிற்சாலைகள் துவங்கப்படுவதை ஊக்குவிப்பதற்காக, விவசாய குழுக்களுக்கு தேவையான மானியம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.விவசாயத்தில் புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்படுவதை போன்று, அவர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் மற்றும் பயிற்சி வகுப்புகள் வேளாண் மை துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விளைபொருட்களை உற்பத்தி செய்யும் விவசாயிகள், அறுவடையோடு தங்கள் பணியை முடித்துக் கொள்ளாமல், அதே விளைபொருளை உணவு பொருளாக மாற்றி விற்பனை செய்வதற்கான வழிமுறைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.அறுவடைக்கு பின் விளைபொருட்களை சிப்பம் கட்டுதல், பதப்படுத்துதல், தரம் பிரித்தல், சேமித்தல் மற்றும் தொலைதூர பகுதிகளுக்கு கொண்டு செல்ல "ஏசி' வசதி செய்யப்பட்ட வேன், மிகுதியான பொருட்களை பாதுகாப்பதற்கான குடோனுக்கு மானியம் அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள 25 பேரை உறுப்பினர்களாக்கி, தனி குழு அமைப்பதன் மூலம் மானியம் பெறுவதற்கான முயற்சியை மேற்கொள்ளலாம்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வெப்பத்தில் வாடும் தாவரங்கள் : வறட்சியால் உயரும் காய்கறி விலை**



கொல்கத்தா: அக்னி நட்சத்திரம் துவங்குவதற்கு முன்பே வெயில் சுட்டெரிக்கிறது. எனவே காய்கறிகள் விலை உயர்வது தவிர்க்க முடியாததாக இருப்பதாக

வியாபாரிகள் கூறுகின்றனர். பச்சை மிளகாய், பீன்ஸ், இஞ்சி, தக்காளி, கேரட் விலை கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 10 முதல் 20 % டெல்லியில் அதிகரித்துள்ளது. சண்டிகாரிலும் கடந்த ஒரு வாரத்தில் காய்கறி விலை குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்ததாக வர்த்தகர்கள் கூறுகின்றனர். ‘பெரும்பாலான காய்கறிகள் வெளிமாநிலங்களில் இருந்து வருகின்றன. அங்கிருந்து வருவதற்குள் வெயிலில் வாடிவிடுவதால், கழிவுகள் போக மற்றவற்றை கூடுதல் விலைக்குதான் விற்க வேண்டியுள்ளது’ என்றனர்.

காய்கறி விலை உயரும்போது பண வீக்கமும் அதிகரிக்கிறது. உதாரணமாக, மார்ச் மாதத்தில் உருளைக்கிழங்கு விலை 27.83 சதவீதம் உயர்தது. பிப்ரவரி மாதத்தில் இது 8.36 சதவீதம் உயர்ந்திருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது விலை மூன்று மடங்கிற்கு மேல் அதிகரித்துள்ளது.  இதுபோல் பிப்ரவரி மாதத்தில் வெங்காயம் விலை 20.06 சதவீதம் குறைந்து இருந்தது. இது மார்ச் மாதத்தில் 1.92 சதவீதம் உயர்ந்துள்ளது. நாசிக் மொத்த வ¤லை சந்தையில் வெங்காயம் விலை கடந்த ஒரு வாரத்தில்40 சதவ¦தம் உயர்ந்துள்ளது. பிப்ரவரியில் 4 சதவீதம் அதிகரித்து இருந்த காய்கறி விலை மார்ச் மாதத்தில் 8.57 சதவீதம் உயர்ந்துள்ளது. பழங்கள் விலை 16.15 சதவீதம் உயர்ந்துள்ளது.

முந்தைய மாதத்தில் இது 9.92 சதவீதம் உயர்ந்து இருந்தது. இதனால் மார்ச் மாதத்தில் மொத்த விலை பண வீக்கமானது 3 மாதங்களில் இல்லாத அளவுக்கு 5.70 சதவீதமாக உயர்ந்தது. மேற்கு வங்கத்தை சேர்ந்த உருளைக்கிழங்குவியாபாரி ஒருவர் கூறுகையில், ‘தற்போது உருளைக்கிழங்கு இங்கு கிலோ ரூ.15க்கு விற்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் இது கிலோ ரூ.18 வரை உயரும். இந்த விலை உயர்வானது நாடு முழுவதும் எதிரொலிக்கும். காய்கறிகளை கெடாமல் பாதுகாக்க குளிர்பதன வசதி பயன்படுத்தினால் கிலோவுக்கு ரூ.2 முதல் ரூ.3வரை அதிகம் வைத்து விற்க வேண்டிவரும் ’ என்றார்.

அகில இந்திய காய்கறி பயிரிடுவோர் சங்க நிர்வாகி ஒருவர் கூறுகையில், ‘மே, ஜுன் மாதங்கள் காய்கறி விற்பனைக்கு சோதனைக்காலமாகும். மழை இல்லாததால் வறட்சி ஏற்பட்டுள்ள நிலையில், 103, 104 டிகிரி வெயில் கொளுத்தினால் காய்கறி உற்பத்தி பாதிக்கப்படுவோது, பாதுகாக்க முடியாமல் ஏராளமாக வீணாகும். எனவே, விலை உச்சத்தை தொடுவதற்கு வாய்ப்புகள் உள்ளன’ என்றார். சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு ஆந்திரா, கர்நாடகா,

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து காய்கறிகள் வருகிறது. இதில் கடந்த வாரத்தை விட நேற்று பீன்ஸ் மற்றும் கேரட் விலை அதிகமாக இருந்தது.

**மீன்பிடி தடை காலம் துவங்கியதால் கடல் நத்தை, சிப்பிகளுக்கு கிராக்கி வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி**



**கடலூர்**: கடலூர் துறைமுகத்தை ஒட்டி உள்ள கடல் உணவு கம்பெனிகளுக்கென பிரத்யேக படகுகள் உள்ளன. அவற்றின் மூலமாக புறா முட்டை சங்கு, கடல் நத்தை, சிப்பி, பச்சை மட்டி போன்றவை கடலில் பிடிக்கப்படுகின்றன. அவற்றை பிடிப்பதற்காகவே சிறப்பாக வடிவமைக்கப்பட்ட வலைகளை பயன்படுத்துகின்றனர். இவற்றை பெட்டிகளில் உயிருடன் அடைத்து சிங்கப்பூர், மலேசியா, தைவான், சீனா போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து வருகின்றனர்.

இங்கு கிலோ ரூ.80 க்கு வாங்கி ரூ.300 வரை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தற்போது மீன்கள் கிடைக்காததால் பெரிய நகரங்களில் உள்ள ஹோட்டல்களில் இந்த கறிகளை வைத்து வறுவல், குழம்பு, சூப் உள்ளிட்ட சுவையான உணவுகள் தயாரிக்கப்படுகின்றன. மீன்பிடி தடை காலம் துவங்கியதால் கடலூர் துறைமுகம் பகுதி வெறிச்சோடி போயிருந்தாலும் கடல் உணவு தயாரிப்பு கம்பெனிகள் பிசியாகி உள்ளன.

இவற்றில் பணிபுரியும் தொழிலாளர்கள் 24 மணி நேரமும் கடல் நத்தை, சிப்பி, புறா முட்டை சங்கு போன்றவற்றின் கறியை பிரித்து, சுத்தப்படுத்தி ஹோட்டல்களுக்கு

அனுப்பும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். கடலூர் துறை முகம் பகுதியில் கடல் நத்தை, சிப்பி, புறா முட்டை சங்குகளை ஓட்டல்களுக்கு அனுப்பும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

**வெற்றிலை விலை ஏற்றம்: விவசாயிகள் மகிழ்ச்சி**



**பரமத்தி வேலூர்**: நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூரிலுள்ள பாண்டமங்கலம், வேலூர் அனிச்சம்பாளையம் உள்பட ஏராளமான ஊர்களில் வெற்றிலை அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு தினமும் வெற்றிலையை பறித்து பரமத்தி வேலூர் ஏலச்சந்தைக்கு விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். கடந்த வாரம் கருப்பு வெற்றிலை முதல் ரகம் ரூ.2,500 க்கும், 2வது ரகம் ரூ.2,300 க்கும் ஏலம் போனது. அதே போல் வெள்ளைக்கொடி வெற்றிலை முதல் ரகம் ரூ.3,000 க்கும், இரண்டாவது ரகம் ரூ.2,500 க்கும் ஏலம் போனது. இந்த வாரம் கருப்பு வெற்றிலை முதல் ரகம் ரூ.3,000 க்கும், 2வது ரகம் ரூ.2,500 க்கும் ஏலம் போனது. வெள்¬ளைக்கொடி வெற்றிலை முதல் ரகம் ரூ.4,000 க்கும், இரண்டாவது ரகம் ரூ.3,500 க்கும் ஏலம் போனது. தொடர்ந்து இரண்டு வாரமாக நடந்த ஏலத்தில் வெற்றிலை அதிக விலைக்கு ஏலம் போனதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**எதிர்வரும் பருவத்தில் பருத்தி ஏற்றுமதி 20% குறைய வாய்ப்பு**



**மும்பை,**

சீனாவில் பருத்தி தேவைப்பாடு குறையும் என்பதால் எதிர்வரும் 2014–15 பருவத்தில் (அக்டோபர் – செப்டம்பர்) நம் நாட்டின் கச்சா பருத்தி ஏற்றுமதி 20 சதவீதம் குறையும் என இத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சீனாவின் பருத்தி கொள்கை தெளிவாக இல்லாததால் கடந்த இரண்டு மாதங்களாக அந்நாட்டு நிறுவனங்கள் இந்தியாவிலிருந்து கச்சா பருத்தி இறக்குமதி செய்வதை மிகவும் குறைத்துள்ளன.

சர்வதேச அளவில் பருத்தி இறக்குமதியில் சீனா முதலிடத்தில் உள்ளது. நம் நாட்டின் மொத்த கச்சா பருத்தி ஏற்றுமதியில் அந்நாட்டின் பங்கு 60 சதவீதமாக உள்ளது. எஞ்சிய பகுதி வங்காளதேசம், பாகிஸ்தான் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. சர்வதேச அளவில் பருத்தி உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் நம் நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.

**தண்ணீர் திறப்பு அதிகரிப்பு எதிரொலி: மேட்டூர் அணை நீர்மட்டம் ஒரே நாளில் ¾ அடி குறைந்தது**



**மேட்டூர்,**

மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு அதிகரித்ததன் எதிரொலியாக ஒரே நாளில் நீர்மட்டம் ¾ அடி குறைந்தது.

<u>மேட்டூர் அணை</u>

மேட்டூர் அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக கடந்த பிப்ரவரி மாதம் முதல் வினாடிக்கு 500 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. பின்னர் குடிநீருக்கான தேவையை கருத்தில் கொண்டு தண்ணீர்திறப்பு அதிகரிக்கப்பட்டது. இதன்அடிப்படையில் கடந்த 10 நாட்களாக வினாடிக்கு 1500 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

இந்த நிலையில் மேட்டூர் அணையின் மூலம் பயன்பெறும் மாவட்டங்களில் குடிநீருக்கான தேவை அதிகரித்து உள்ளது.

இதன் காரணமாக நேற்று முன்தினம் முதல் மேட்டூர் அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 6 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டது.


<u>நீர்மட்டம் குறைந்தது</u>

இவ்வாறு தண்ணீர் அதிக அளவில் திறந்து விடப்படுவதால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஒரேநாளில் ¾ (0.75)அடி குறைந்தது. அதாவது நேற்று முன்தினம் 42.87 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று 42.12 அடியாக குறைந்தது. மேலும் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 350 கனஅடி வீதமே உள்ளது.

அணைக்கு நீர்வரத்தும், அணையில் இருந்து தண்ணீர் திறப்பதும் தொடர்ந்து இதேநிலையில் நீடித்தால் நீர்மட்டம் இன்னும் 2 வாரங்களில் 30 அடியாக குறைந்து விடும்.

கோடைமழை கைகொடுத்தால் மட்டுமே அணைக்கு நீர்வரத்து அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. அணையில் உள்ள தண்ணீர் இருப்பு கோடைவெயிலை தாங்கி குடிநீர் தேவையை பூர்த்தி செய்யுமா? என்ற கேள்வி எழுந்து உள்ளது.

**நாமக்கல்லில் ரூ.8 லட்சத்துக்கு பருத்தி ஏலம்**



**நாமக்கல்,**

நாமக்கல் – திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது.

வழக்கம்போல் நேற்று கூட்டுறவு சங்க அதிகாரிகள் முன்னிலையில் பருத்தி ஏலம் நடந்தது.

இந்த பருத்தி ஏலத்துக்கு நாமக்கல், புதுச்சத்திரம், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், பவித்திரம், வேலகவுண்டம்பட்டி என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் ஏறத்தாழ 500 மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இந்த பருத்தி மூட்டைகள் ஏறத்தாழ ரூ.8 லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச்.ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.5 ஆயிரத்து 69 முதல் ரூ.5 ஆயிரத்து 310 வரைக்கும், டி.சி.எச். ரக பருத்தி ரூ.5 ஆயிரத்து 206 முதல் ரூ.5 ஆயிரத்து 456 வரைக்கும் ஏலம் போனது.

இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர்.

**பிலிக்கல்பாளையம் ஏல மார்க்கெட்டில் வெல்லம் விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி**



**பரமத்தி வேலூர்,**

பிலிக்கல்பாளையம் வெல்ல ஏல மார்க் கெட்டில் வெல்லத்தின் விலை உயர்ந்து உள்ள தால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள் ளனர்.

**<u>கரும்பு பயிரீடு</u>**

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகா பரமத்தி வேலூர், குப்பிச்சி பாளையம், எல்லைமேடு, சோழசிராமணி, ஜமீன் இளம்பிள்ளை, ஜேடர்பாளை யம், பிலிக்கல்பாளையம், அண்ணா நகர், கபிலர்மலை, உள்ளிட்ட பல்வேறு பகுதி களில் ஏராளமான ஏக்கரில் கரும்பு பயிர் செய்யப்பட்டு உள்ளது.

இந்த பகுதிகளில் விளையும் கரும்புகள் வெட்டப்பட்டு சோழசிராமணி, ஜேடர் பாளையம், பிலிக்கல் பாளையம், அய்யம்பாளையம், கபிலர்மலை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள 100–க்கும் மேற்பட்ட வெல்லம் தயாரிக் கும் ஆலைகளுக்கு அனுப்பப் பட்டு அங்கு கரும்பை சாறு பிழியப்பட்டு பின்னர் கொப் பறைகளில் காய்ச்சப்பட்டு அச்சு மற்றும் உருண்டை வெல்லங்களாக தயாரிக்கப் படுகிறது.

**வரத்து குறைந்தது**

இவ்வாறு வெல்ல ஆலைகளில் தயாரிக்கப்படும் வெல்லம் அனைத்தும் 30 கிலோ கொண்ட சிப்பங்களாக மூட்டைகளில் தனித்தனியே கட்டப்பட்டு பிலிக்கல் பாளையத்தில் உள்ள வெல்ல ஏல மார்க்கெட்டுக்கு அனுப் பப்படுகிறது. தற்போது கரும்பு வரத்து குறைந்து உள்ளதால் குறைந்த அளவிலேயே வெல்லம் தயார் செய்யப்பட்டு வருகிறது. கரும்பு உற்பத்தி குறைந்து உள்ளதால் தற்போது கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.2,500–க்கு விற்பனை செய்யப்படுகிறது. பிலிக்கல்பாளையம் வெல்ல ஏல மார்க்கெட்டிற்கு வெல்லம் வரத்தும் குறைந்து உள்ளது. இந்த வாரம் 8 ஆயிரம் சிப்பம் குண்டு வெல்லமும், 6 ஆயிரம் சிப்பம் அச்சு வெல்லமும் மட்டுமே வந்திருந்தது.

**விலை உயர்வு**

சென்ற வாரம் நடைபெற்ற ஏலத்தில் குண்டு வெல்லம் சிப்பம் ஒன்று ரூ.1000–த்திற்கும், அச்சு வெல்லம் சிப்பம் ஒன்று ரூ.1,150–க்கும் ஏலம்போனது. இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் விலை சற்று உயர்ந்து குண்டு வெல்லம் சிப்பம் ஒன்று ரூ.1,100–த்திற்கும், அச்சு வெல்லம் சிப்பம் ஒன்று ரூ.1,250–க்கும் ஏலம் போனது. கரும்பின் விளைச்சல் குறைந் ததால், வெல்லத்தின் வரத்தும் குறைந்ததன் காரணமாக வெல்லத்தின் விலை சற்று உயர்ந்து உள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

**மரபணு மாற்றிய அமெரிக்க சோளம் சீனா ஏற்க மறுத்ததால் ரூ.18 ஆயிரம் கோடி இழப்பு**



**சிகாகோ,**

சோளம் இறக்குமதி செய்யும் நாடுகளில் சீனா 3–ம் இடம் வகித்து வருகிறது. இது அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்து சோளத்தை இறக்குமதி செய்து வருகிறது.

இந்த நிலையில் அமெரிக்காவில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட சோளம் பயிரிடப்பட்டு வருகிறது. இது சீனா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளது. எனினும் அமெரிக்காவின் தேசிய விதையூட்ட கூட்டமைப்பு சார்பில், 2.9 பில்லியன் டாலர் (சுமார் ரூ.18 ஆயிரம் கோடி) மதிப்புள்ள மரபணு மாற்றம் செய்யப்பட்ட சோளம் சீனாவுக்கு கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டது.

ஆனால் இதை தங்கள் நாட்டுக்குள் அனுமதிக்க சீனா மறுத்து விட்டது. இது அமெரிக்காவுக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தி உள்ளது.